From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.67/18

Deposition of witness for: PW -11

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்மேகம் | Father/Husband Name | : தென்னரசு |
| Age | : | Calling | : |
| Date | : 29.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 29 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் வடக்கு நாவினிப்பட்டியில் குடியிருந்து கொண்டு டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி குமாரை எனக்கு தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த சாட்சி கையொப்பம் அசாஆ ஆக 3 குறியீடு செய்யப்படுகிறது.** ). மேலூர் போலீசார் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள்.

**அரசுதரப்பிழ் அசா11 யை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிகோரப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். பார்வை மகஜரில் நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்துள்ள பார்வை மகஜரில் விவரங்கள் தெரிந்துதான் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் குமார் மற்றும் எனது முன்னிலையில்தான் மாதிரி வரைந்தார்கள் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.67/18

Deposition of witness for: PW -10

| | | | |
|---|---|---|---|
| Name | : பவித்ரா | Father/Husband Name | : கார்மேகம் |
| Age | : | Calling | : |
| Date | : 29.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் வடக்கு நாவினிப்பட்டியில் குடியிருந்து கொண்டு வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். சுமார் 4, 5 வருடத்திற்கு முன்பு அசா1 உடன் ஆஜர் எதிரி நாவினிப்பட்யில் சண்டை போட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**அரசுதரப்பிழ் அசா10 யை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிகோரப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

வடக்கு நாவினிப்பட்டி என்பது ஒரு சின்ன கிராமம் என்றால் சரிதான். அதனால் எதிரியின் வீடு, எனது வீடு அக்கம், பக்கம்தான் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரித்தபோது நான் 06.02.2018 ம் தேதி மதியம் 01.00 சம்பவ இடத்தில் தான் இருந்ததாகவும், சம்பவத்தை கண்ணுற்று பார்த்தாகவும், ஆஜர் எதிரி யசோதவை தகாத வார்த்தையால் பேசியதாவும், கொலை மிரட்டல் விடுத்ததகவும், அவர்கள் சென்ற இருசக்கர வாகனத்தை எடுக்க விடாமல் தடுத்தாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இருந்தேன் என்றும், போலீசார் என்னை விசாரித்தேன் என்றும், விசாரணையில் நடந்த உண்மைகளை அளித்தேன் என்றும், தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக நடந்த உண்மைகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.